SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : _____

வகுப்பு : _____

மதிப்பெண்கள் : /70

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 9 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

SECONDARY 3 EXPRESS

SECONDARY 3 SET 12 /15

More papers at www.testpapersfree.com

# தமிழ்

## தாள் 2

நாள்-3

**A1** மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் எழுதுக.

Q1 தங்கப்பன் ________ என்பதால், அவனிடம் யாரும் எந்த இரகசியத்தையும் சொல்வதில்லை.

Q2 ________ இல்லாத கொடியவர்கள் ஒரு பச்சிளங் குழந்தையைக் கடத்திச் சென்று கொன்றுவிட்டனர்.

Q3 போர்க் கைதிகளுக்குப் போதிய உணவின்மையால் அவர்களுடைய வயிறு ________ போயிற்று.

Q4 வேலன் தான் தேர்வில் வெற்றி பெற்ற செய்தியைத் தன் பெற்றோர்க்கு உடனே தெரிவிப்பதற்காக ________ சென்றான்.

Q5 வியாபாரத்தில் எதிர்பாராத விதமாக நட்டம் அடைந்த மாறனுக்கு ________ எவருமே முன்வரவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஓட்டம் பிடித்து | (6) | நன்மை தீமை |
| (2) | ஈவிரக்கம் | (7) | ஓட்டைவாயன் |
| (3) | கைகொடுக்க | (8) | கதை கட்டுபவன் |
| (4) | ஆறவமர | (9) | தட்டிக் கொடுக்க |
| (5) | ஓட்டமும் நடையுமாய் | (10) | ஒட்டி உலர்ந்து |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

Q6 புதிய தொலைக்காட்சி நாடகத்தொடரை மக்கள் விரும்பிப் பார்த்தனர்.

புதிய தொலைக்காட்சி நாடகத்தொடர் ______________________________

______________________________

Q7 பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை இளமையிலிருந்தே கவனித்து வளர்க்காவிட்டால் தீய செயல்களில் ஈடுபட வாய்ப்புண்டு.

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை இளமையிலிருந்தே கவனித்து

வளர்த்தால் ______________________________

Q8 தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகுதியால் மனிதன் புகழ் பெறுகிறான்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகுதியே ஒரு மனிதனுக்குப்

புகழை ______________________________

Q9 மாணவர்கள் சிரமப்பட்டுப் படித்தால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் ______________________________

______________________________

Q10 மக்கள் கடுமையாக உழைத்தால்தான் ஒரு நாடு முன்னேறும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ______________________________

______________________________

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

B3 <u>அமைப்புச் சொற்கள்</u> (10 மதிப்பெண்கள்)

*கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் <u>எண்ணை மட்டும் எழுதுக.</u>*

மனித உடம்புக்கு ஏற்ற உணவுகள் சில; அவற்றை மட்டுமே மனித உடம்பின் குடல் செரிக்க முடிகிறது. பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் முதலியவற்றைக் குடல் (Q11) ______. குடலின் வாயிற்காவலன் போல் உள்ள நாக்கும் அவற்றை விரும்பிச் சுவைக்கிறது. நாக்கு வெறுக்கின்றவற்றைக் குடலுக்குள் தள்ளக்கூடாது. நாக்கில் தெவிட்டும் நிலை வந்த பிறகு, (Q12) ______ நல்ல உணவாக இருந்தாலும் அந்த நிலைக்குப் பிறகு உண்ணக்கூடாது. சுவையாக உள்ளதே என்று சிறிதும் விரும்பக்கூடாது.

நாக்கு (Q13) ______ உணவுப் பொருள்களை உள்ளே திணிக்கக்கூடாது. உணவை அவசர அவசரமாக (Q14) ______ வழக்கமும் கூடாது. ஒவ்வொரு பொருளையும் வாயில் இட்டுப் பல்லால் மெல்ல வேண்டியவற்றை மென்று நாக்கு நன்றாகச் சுவைத்த பிறகே உள்ளே விழுங்க வேண்டும். இயற்கையின் அமைப்பின்படி அது (Q15) ______ தேவையாகிறது. அப்போதுதான் வாயின் உட்புறத்தில் உணவைச் செரிப்பதற்காக அமைந்த உமிழ்நீர் போதுமான அளவு உண்ணும் உணவுடன் கலந்து உள்ளே செல்லும். இதனால் செரிமானம் எளிதாக ஏற்படும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | சுவைத்த | (6) | விழுங்கும் |
| (2) | எவ்வளவு | (7) | ஏற்றுக்கொள்கிறது |
| (3) | தள்ளும் | (8) | நிச்சயம் |
| (4) | கட்டாயம் | (9) | எத்தனை |
| (5) | விரும்புகிறது | (10) | புறக்கணித்த |

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

## 'இ' பிரிவு


C4. தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.

மக்கள், வாழ்க்கையின் தேவைக்கேற்ப மாறுதல்கள் செய்துகொள்ள வல்லவராக உள்ளனர். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த தமிழர் உடுத்திய உடை வேறு, இன்றைய தமிழர் உடுத்தும் உடை வேறு. அவர்கள் தம்மை அலங்கரித்துக்கொண்ட முறைக்கும் இன்று நாம் அலங்கரித்துக்கொள்ளும் முறைக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. அவர்கள் உண்ட உணவு, உண்ட முறை ஆகியவற்றோடு நாம் உண்ணும் உணவையும் உண்ணும் முறையையும் ஒப்பிட்டாலும் சில வேறுபாடுகள் புலப்படும். இவை எல்லாம் புறத்தே நேர்ந்த மாறுதல்கள்.

காலம் செல்லச் செல்ல வாழ்க்கை படிப்படியே மாறிவருகிறது. வாழ்க்கையை ஒட்டிய கருத்துகளும் மெல்ல மெல்ல மாறி வருகின்றன. உண்பன உடுப்பன முதலான புறவாழ்க்கைப் பகுதிகளில் மட்டும் அல்லாமல் மனிதன் எண்ணும் எண்ணங்கள், உணரும் உணர்வுகள் ஆகிய அகவாழ்க்கைப் பகுதிகளிலும் மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மாறுதல்களை உணர்ந்து அவற்றிற்கு ஏற்ப வாழ்க்கையை ஒத்து நடத்துகின்றவர்கள் வாழ வல்லவர்கள் ஆவர்.

அரண்மனையிலும் போற்றப்படும் சிறப்புப்பெற்ற யானை இனம், இன்று எண்ணிக்கையில் குறைந்துவரக் காண்கிறோம். வளமான மலைகளும், அடர்ந்த காடுகளும் இல்லையானால், யானை இனம் வாழ இயலாததாய் வருந்துகின்றது. ஆனால் எறும்புக்கூட்டத்திற்கோ குறைவில்லை. அது, எவ்விடத்திலும் எப்படியும் வாழவல்ல இனமாய் விளங்குகின்றது. மாளிகையிலும் வாழ்கின்றது; சாதாரண வீடுகளிலும் வாழ்கின்றது; அறுவடை நிலத்திலும் வாழ்கின்றது. வறண்ட நிலத்திலும் வாழ்கின்றது. பறவைகளைப் பற்றி ஆராய்ந்தாலும் இந்த உண்மையே தெரிகின்றது.



More papers at www.testpapersfree.com

வினாக்கள்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16. காலம் போகப் போக எவையெல்லாம் மாற்றம் காண்கின்றன?

1) வாழ்க்கையும் கருத்துக்களும்
2) உண்ணும் உணவுகளும் உடுத்திக்கொள்ளும் உடைகளும்
3) அகவாழ்வும் புறவாழ்வும்
4) எண்ணங்களும் உணர்வுகளும் ( )

Q17. யானைகளின் எண்ணிக்கை குறைந்துபோகக் காரணம் என்ன?

1) சூழ்நிலைக்கேற்றவாறு வாழத்தெரியாததால்
2) மலைகளும் காடுகளும் இல்லை என்பதால்
3) எறும்புகள் இனப்பெருக்கம் செய்வதால்
4) எறும்புகள் சூழ்நிலைக்கேற்றவாறு வாழமுடிவதால் ( )

More papers at www.testpapersfree.com

C

இயந்திர உலகில் வாழும் இன்றைய மக்கள் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் மிக உயர்ந்த நிலையில் இருந்தாலும் கூட, இலக்கியத்தைக் கட்டாயம் கற்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். இலக்கியத்தை ஏன் கட்டாயம் கற்க வேண்டும்? இலக்கியத்தைக் கற்காவிட்டால் இந்த உலகில் நாம் வாழ முடியாதா? அறிவியல் மட்டும் கற்று வாழலாம் என்ற சூழ்நிலை இருக்கும்போது எதற்காக நாம் இலக்கியத்தைக் கற்க வேண்டும்? என்ற வினாக்கள் கற்றவர்களிடம் மட்டுமல்ல, இந்த உலகில் வாழுகின்ற அனைத்துப் பிரிவு மக்களிடமும், இன்றைய சூழ்நிலையில் எழுந்துள்ளன எனலாம். எனவே இலக்கியம் என்பது என்ன? அதை நாம் ஏன் கற்க வேண்டும்? அதைக் கற்பதால் ஏற்படும் பயன் என்ன? என்பன போன்றவற்றை நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வுலகில் வாழும் மனிதனின் தோற்றத்தையும், அவனது வளர்ச்சியையும் கட்டாயம் நாம் அறிந்துகொள்ள வேண்டும். மனிதனின் வளர்ச்சிக்கும் இலக்கியப் படைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனலாம்.

தொடக்க காலத்தில் மனிதன் காட்டு மிராண்டியாக விலங்கோடு விலங்காகக் காட்டில் திரிந்து, விலங்குகளைப் போல் குகைகளில் அடைந்து, கூடு கட்டாத பறவையைப் போல் ஆங்காங்கே வாழ்ந்து வந்தான். பின்னர் விலங்குகளுக்கு அஞ்சிய மனிதன் கூட்டங்கூட்டமாக வாழத் தொடங்கினான். அக்கால கட்டத்தில் தன் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களைச் செய்கை மொழியின் மூலம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டான் பகுத்தறிவு அற்ற அந்த மனிதன்.

Q18 இன்று கற்றவர்கள் என்ன எண்ணுகிறார்கள்?

(1) இலக்கியம் படிக்க வேண்டும் என்று
(2) அறிவியல் மட்டும் படித்தால் போதுமென்று
(3) தொழில்நுட்பம் படிக்க வேண்டும் என்று
(4) இலக்கியமும் அறிவியலும் படிக்க வேண்டும் என்று

( )

Q19 எவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறலாம்?

(1) வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும்
(2) மனிதனுக்கும் அறிவியலுக்கும்
(3) மனிதனுக்கும் இலக்கியத்திற்கும்
(4) இலக்கியத்திற்கும் அறிவியலுக்கும்

( )

Q20 பழங்கால மனிதன் தன் கருத்தை எவ்வாறு மற்றவர்களுக்குத் தெரிவித்தான்?

(1) எண்ணங்களின் மூலம்
(2) சொற்களின் மூலம்
(3) மொழியின் மூலம்
(4) செய்கையின் மூலம்

( )

More papers at www.testpapersfree.com

"ஈ" பிரிவு

D5 சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)
பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

நாம் வாழும் சிக்கல் மிகுந்த இக்காலத்தில் பெற்றோர்கள் தம் மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களை அன்பாக வளர்ப்பதற்கு வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. பெற்றோர்களுக்கு வெவ்வேறு கடமைகள் மிகுந்து, வீட்டில் இருந்து வாழும் நேரம் குறைந்துவிட்டது. அதனால், அவர்கள் தாம் பெற்ற மக்களோடு இணைந்து வாழ்ந்து அவர்களின் உள்ளத்தைப் பண்படுத்துவதென்பது இயலாத ஒன்றாகிவிட்டது. அது மட்டுமன்றிக் கல்விக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களோடு உள்ளம் இயைந்து பழக முடியாத காலம் இது. மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருவதுடன் பாடங்களும் கூடி வருவதால், மணிக்கணக்குப் பார்த்து, வகுப்புகளை இயந்திரம்போல் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. தேர்வுப் பாடங்களுக்காக மாணவர்களும் சம்பளத்திற்காக ஆசிரியர்களும் கல்விக்கூடங்களில் ஒன்று சேர்கின்றனர். ஆகவே, மனங்களைப் பண்படுத்தும் வாய்ப்பும் ஆற்றலும் ஆசிரியர்களுக்கு முன்போல் இல்லை.

நல்ல நூல்கள் உள்ளங்களைப் பண்படுத்தும் பயனை ஓரளவிற்கு விளைவிக்கின்றன. அயினும், அவை எப்படியோ, இளமையிலேயே பண்பட்ட சில மனங்களுக்குத்தான் ஏற்றவையாக அமைகின்றன. புத்தகங்கள் மிகப் பல்கிவிட்டதால், சிலவற்றை ஆழ்ந்து படித்து, அவற்றையே நம்பிப் பயன்பெறும் பழங்காலம் போய்விட்டது. புத்தகங்கள் பெருகிவிட்டமையால், பலவற்றையும் மேற்போக்காகப் படிப்பதற்கே நேரம் உள்ளது. ஆகவே, நல்ல நூல்களுக்கும் மனங்களுக்கும் தொடர்பு குறைகிறது.

புத்தகங்களைவிட வார இதழ், மாத இதழ் முதலானவை கவர்ச்சி மிகுந்தவை ஆகிவிட்டன; படித்துப் பொழுதுபோக்குவதற்கென்றே படைக்கப்படுகின்றன. ஆகவே, அவை நெஞ்சில் ஆழ்ந்து பதிவது என்ற நிலைக்கு அப்பாற்பட்டு விளங்குகின்றன. அந்தந்த வாரத்தோடு அவற்றின் பயன முடிந்துபோகிறது. வானொலியின் பயனும் அந்தந்த மணியோடு முடியும் இயல்புடையது. தொலைக்காட்சியின் பயனும் அத்தகையதே. இவற்றால் வளரும் மனத்திற்குப் பரபரப்பும் வேகமும் அமைகின்றனவே தவிர, ஆழ்ந்து கற்கும் தன்மையும் பண்பாடும் அமைவதில்லை. மேலும், தக்க சான்றோர்களை அடுத்துப் பழகிப் பண்படும் வாய்ப்பும் குறைந்து வருகிறது. நகரங்களிலுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தால், யார் எப்படிப்பட்டவர் என்ற உண்மையை உணர முடியாத நிலைமையும் உள்ளது. விளம்பர வலிமையால் கெட்டவர்கள் செல்வாக்குப் பெற்று உயரவும் முடிகிறது; நல்லவர்கள் செல்வாக்கு இழந்து மூலையில் ஒடுங்கவும் நேர்கிறது. ஆகையால், நல்லவர் கெட்டவர்போல் தோன்றவும், கெட்டவர் நல்லவர்போல் விளங்கவும் வாய்ப்பு உள்ளது. இவற்றையெல்லாம் கடந்து, உண்மையாகவே நல்லவர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தாலும் அவருடன் நெருங்கிப் பழக இக்கால வாழ்க்கைச் சூழல் இடம் தருவதில்லை. அவருக்கும் கடமைகள் பல; நமக்கும் கடமைகள் பல. அதனால், பழகிப் பண்படுவதற்குத் தேவையான ஓய்வும் அமைதியும் கிடைப்பதில்லை.

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

திரைப்படம் முதலானவை பணம் என்னும் பேயால் ஆட்டி வைக்கப்படுகின்றன. இலட்சக்கணக்கில் முதலீடு செய்தவர்கள் அறத்தையும் பண்பாட்டையும் பொருட்படுத்தினால், <u>அடியோடு</u> அழிந்துபோகும் நிலையும் ஏற்படலாம். அதனால், அவர்கள் சுவைகளையும் கவர்ச்சிகளையும் பெருக்கிப் புலன்களுக்கு விருந்தளிப்பதிலேயே கருத்தாக இருக்கிறார்கள். ஆகவே, திரைப்படம் முதலியவற்றால் பொழுதுபோக்க வாய்ப்புப் பெருகியுள்ளதே தவிர, பண்படுவதற்கு வாய்ப்புப் பெருகவில்லை. புலனடக்கம் இல்லாதவர்கள் அவற்றால் <u>நெறி</u> தவறுவதற்கு வேகம் பெறுகிறார்கள். பிறகு, அவர்களைத் திருத்துவது அரிதாகின்றது.

Q21. பெற்றோர் தம் பிள்ளைகளை உடன் இருந்து வளர்க்க முடியாமைக்குக் காரணம் என்ன?

Q22. இன்றைய பள்ளிகளில் காணப்படும் குறைபாடு என்ன?

Q23. நல்ல நூல்களுக்கும் வார இதழ்களுக்கும் உள்ள வேறுபாடு யாவை?

Q24. சான்றோர் ஒருவருடன் நாம் ஏன் கூடிப் பழக முடிவதில்லை?

Q25. திரைப்படங்களால் விளையும் தீமை என்ன?

<u>பொருள் தருக</u>

Q26. இயைந்து

Q27. பல்கி விட்டதால்

Q28. வாய்ப்பு

Q29. அடியோடு

Q30. நெறி

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 12

உயர்நிலை - 3 தேர்வுத்தாள் -3

தங்கப்பன் ______ என்பதால் ...

1) 7 2) 2 3) 10 4) 5 5) 3

6) மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்டது.
7) அவர்கள் தீய செயல்களில் ஈடுபட வாய்ப்பில்லை.
8) பெற்றுத் தருகிறது.
9) மாணவர்கள் சிரமப்பட்டு படிக்க வேண்டும்.
10) மக்களின் கடுமையான உழைப்பைப் பொறுத்தே அமையும்.

11) 7 12) 9 13) 10 14) 6 15) 4
16) 3 17) 1 18) 3 19) 3 20) 4

21) இக்கால பெற்றோர்களுக்கு வெவ்வேறு கடமைகள் மிகுந்ததால் அவர்கள் வீட்டில் இருந்து வழும் நேரம் குறைந்து விட்டது. இதுவே பெற்றோர் தம் பிள்ளைகளுடன் இருந்து வளர்க்க முடியாமைக்குக் காரணம் ஆகும்.

22) இன்றைய பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையுடன் பாடங்களும் கூடி வருவதால் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்று சேர்ந்து பழக முடியாத சூழல் உருவாகி உள்ளது. மேலும் ஆசிரியர்களும் மணிக்கணக்குப் பார்த்து வகுப்புகளை இயந்திரம் போல் நடத்தி வருகின்றனர். தேர்வுக்காக மாணவர்களும் ஊதியத்திற்காக ஆசிரியர்களும் ஒன்று சேர்வதால் மனங்களைப் பண்படுத்தும் சந்தர்ப்பமும் திறமையும் ஆசிரியர்களிடம் குறைந்து கொண்டே வருகிறது. இதுவே இன்றைய பள்ளிகளில் காணப்படும் குறைபாடு ஆகும்.

23) நல்ல நூல்கள் மனங்களைப் பண்படுத்தும் தன்மையுடையன. ஆனால் வார இதழ்கள் கவர்ச்சி மிகுந்தவையாகி விட்டன. நல்ல நூல்களைக் கூர்ந்து படித்துப் பயனடையலாம். வார இதழ்கள் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்தவை. நல்ல நூல்களின் கருத்துக்கள் மனதில் ஆழ்ந்து பதியும் தன்மையுடையன. ஆனால் வார இதழ்கள் இதற்கு மாறான தன்மையுடையவை: நல்ல நூல்களின் பயன் எப்போதும் இருக்கும். வார நூல்களின் பயன் அந்தந்த வாரத்தோடு முடிந்து விடுகிறது. இவையே நல்ல நூல்களுக்கும் வார நூல்களுக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

24) நகரங்களிலுள்ள மக்கட்தொகைப் பெருக்கத்தால் யார் எத்தகையவர் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புகள் மிகக் குறைவு.விளம்பரத்தின் வலிமையால் கெட்டவர் நல்லவர் போல் தோற்றமளிக்கும் சூழல் உருவாகியுள்ளது. நல்லவர் ஒடுங்கி வாழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இங்ஙனம் நல்லவர் கெட்டவர் போலவும் கெட்டவர் நல்லவர் போலவும் தோன்றும் சந்தர்ப்பத்தில் உண்மையாகவே நல்லவர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு அமைந்தாலும் அவருடன் நெருங்கிப் பழக பண்படுவதற்கு இக்கால வாழ்க்கைச் சூழல் இடம் கொடுப்பதில்லை. எனவே சான்றோர் ஒருவருடன் நாம் கூடிப் பழக முடிவதில்லை.

25) இலட்சக்கணக்கில் முதலீடு செய்து படங்கள் எடுப்பவர்கள் அறத்தையும் பண்பாட்டையும் மறந்து சுவையையும் கவர்ச்சிகளையும் கூட்டி புலன்களுக்கு விருந்தளிப்பதிலேயே குறியாக உள்ளனர். திரைப்படங்கள் மக்களைப் பண்படுத்த தவறி விடுகின்றன . மேலும் புலனடக்கம் இல்லாதவர்கள் அவற்றால் நெறி தவறி தடம் மாறுவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன . இவையே திரைப்படங்களால் விளையும் தீமைகள் ஆகும்.

26) சேர்ந்து 27) பெருகிவிட்டதால் 28) சந்தர்ப்பம்
29)முற்றிலும் 30) தனிமனித ஒழுக்கம்

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com